சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R.பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20-ம் நாள் வியாழக்கிழமை

இடைமனு எண்.4/2025

இன்

அசல் வழக்கு எண்.119/2021

.....

1) சேது

2) அமிர்தம்

3) செல்லப்பாண்டியன் ....மனுதாரர்கள்/வாதிகள்

**/எதிர்/**

1) முத்துராமன்

2) தனலெட்சுமி

3) மணிகண்டன் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 27.10.2025-ம் தேதியன்று வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. R.G.சங்கர்கணேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.A.பிரபாகர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

**உத்தரவு**

தாவா வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சியங்களை மேலும் விசாரணை செய்ய Re-open செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151 -ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

தாவா மனுவானது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பிற்கான சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டு 07.02.2025 அன்று மனுதாரர்கள்/வாதிகள்

தரப்பில் சாட்சியம் அளித்திட யாரும் முன்வராத காரணத்தால் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சியமானது முடித்து வைக்கப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சாட்சியம் அளித்திடாமல் இருந்ததற்கு காரணமாக மனுதாரர்கள்/வாதிகள் வழக்கறிஞருக்கு "டைபாய்டு காய்ச்சல்" ஏற்பட்டு உடல்நலம் சரியில்லாமல் இருந்ததால் 07.02.2025 -ம் தேதியன்று இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலை ஆகிடவில்லை என்றும், அதனால் தாவா அசல் வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சியமானது முடித்து வைக்கப்பட்டதாகவும் அன்றையதினம் மனுதாரர்கள்/வாதிகளும் உறவினர் விசேஷத்திற்கு சென்றுவிட்டதால் நீதிமன்றத்திற்கு வருகை தர முடியவில்லை என்றும் எனவே முடித்து வைத்திட்ட மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சியத்தை Re-open செய்வது அவசியமான ஒன்று என்றும் இல்லாது போனால் மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஈடு செய்ய இயலாத இழப்பு ஏற்பட்டுவிடும் என்றும் எனவே தாவா மனுவினை அனுமதித்து உத்தரவிடுமாறு மனுவின் சுருக்கம் உள்ளது.

**3) <u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்.</u>**

தாவா சொத்திற்கு மனுதாரர்கள்/வாதிகள் உரிமையாளர்கள் என்பதற்கான ஆவணம் எதுவும் மனுதாரர்கள் வசம் இல்லை என்றும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்கு ஏற்கனவே போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு விட்டது என்றும், தாவா வழக்கிற்கு அவசியமில்லாத தரப்பினரை விசாரிக்க ஏற்கனவே மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது என்றும், தாவா வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்பதற்காகவே தாவா மனுவானது மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே மனுதாரர்கள்/வாதிகள் தரப்பிலான தாவா மனவினை தள்ளுபடி செய்திட வேண்டும் என எதிர்உரை சங்கதி உள்ளது.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத் தக்கதா என்பதேயாகும்?

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

**6**. இருதரப்பு சங்கதிகளை பரிசீலனை செய்கையில் தாவா அசல் வழக்கானது தாவா சொத்து குறித்து விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். மேற்படி வழக்கு சங்கதிகளை நிரூபித்திட இருதரப்பிற்கும் போதிய வாய்ப்பு வழக்குவது அவசியமாகும். அந்த வகையில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சிக்காக (Further witness) 07.02.2025 அன்று ஒத்தி வைக்கப்பட்ட வழக்கின் விசாரணைக்கு வரமுடியாமல் போனதற்கு மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பு வழக்கறிஞர் "டைபாய்டு காய்ச்சலால்" உடல் நலம் சரியில்லாமல் இருந்தார் என்ற சங்கதி ஏற்கும்படி உள்ளது. 07.02.2025 அன்று மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வராமல் மனுதாரர்கள்/வாதிகள் மட்டும் வந்திருந்தாலும் அன்றையதின விசாரணையில் முன்னேற்றம் எதுவும் இருந்திருக்க முடியாது. மனுதாரர்கள்/வாதிகளின் வழக்கறிஞரின் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 07.02.2025 அன்று சாட்சியம் அளித்திட முடியவில்லை என்ற காரணம் ஏற்கும்படி உள்ளது. தாவா மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ஏற்படும் இழப்பானது தாவா மனவினை தள்ளுபடி செய்வதால் மனுதாரர்கள்/வாதிகளுக்கு எற்படும் இழப்பை விட குறைவான ஒன்று என்பதால் தாவா மனுவினை எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் அனுமதித்து உத்தரவிடுவது நீதியின் நலனுக்க உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானம் செய்கிறது.

முடிவாக தாவா மனுவானது ரூ.1000/- செலவுத் தொகையை மனுதாரர்கள்/ வாதிகள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு வருகிற 27.11.2025-க்குள் செலுத்தும் பட்சத்தில் மனு அனுமதிக்கப்படும் எனவும் தவறும் பட்சத்தில் இந்த மனுவானது தானாக தள்ளுபடியாகிவிடும் எனவும் உத்தரவிடப்படுகிறது. அடுத்த வாய்தா 28.11.2025.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2025.11.20 17:30:56 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள்

தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.11.20 17:31:04 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

Subordinate Court, Sivagangai
I.A.No.4/2025 in O.S.No.119/2021
**Draft/Fair/Order**
20.11.2025